

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பின்படி மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் பி.கே.மூக்கையா தேவர் அவர்களின் மணிமண்டபம் அமைய உள்ள இடத்தில் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஸ் குமார், மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், ராமநாதபுரம் மாவட்ட செயலாளர் காதர் பாஷா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் மற்றும் அதிகாரிகள் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### ஆசிரியர் தினம்: கரூர் மாவட்டத்தில்

# ரூ.30.95 லட்சம் மதிப்பீட்டில் ஆசிரியர்கள் - மாணவர்களுக்குப் பரிசு!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!



*கரூர்.செப்.8.*

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்டத்தில் 2,046 ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கு ரூ. 30.95 லட்சம் மதிப்பீட்டில் ரொக்கப் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.

கரூர் அட்லஸ் கலையரங்கத்தில் ஆசிரியர் தின விழா நடைபெற்றது. கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில், 10 மற்றும் 12 ம் வகுப்பில் 100 சதவீத தேர்ச்சி வழங்கிய ஆசிரியர்கள், மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் மாணாக்கர்களை பங்கேற்க செய்த உடற்கல்வி ஆசியர்கள் மற்றும் மாவட்ட, மாநில அளவில் சிறப்பு நிலை தகுதி பெற்ற மாணாக்கர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

**விழாவில் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு. எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாக, திருநாளாக நாம் வாழ்க்கையில் எல்லா வகையிலும் சந்தோஷப்படக்கூடிய ஒரு நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது. அதற்கு காரணம் இங்கே அரங்கத்தில் அமர்ந்திருக்கக்கூடிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் பெருமக்கள் 100% தேர்ச்சி வழங்கிய தலைமை ஆசிரியர் பெருமக்கள் ஆவர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எந்தெந்த துறைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை கணித்து அதற்கான நிதிகளை கொடுத்து, அந்த துறைகளை வளர்த்து அதற்கான பெருமைகளை சேர்க்கக்கூடிய ஒரு அரசாக திராவிட மாடல் அரசை வழிநடத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டைப் கல்வியில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக உயர்த்தியதை நாம் நினைத்து பார்த்திட வேண்டும்.

உங்களைப் போல நானும் ஒரு அரசு பள்ளியில் படித்த மாணவன். அந்த வகையில் நாம் அனைவரும் ஒரு குடும்பம். முதலமைச்சர் அவர்கள், யாரும் சிந்திக்காத ஒரு மகத்தான திட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என்ற ஒரு சிறப்பு வாய்ந்த திட்டத்தை தொடங்கி வைத்து, அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறுகின்ற பள்ளியில் படிக்கக் கூடிய குழந்தைகளுக்கு மிகச் சிறப்பான திட்டமாக உலகத்திற்கு வழிகாட்டக்கூடிய திட்டமாக செயல்படுத்தி வருகிறார்கள். மற்ற மாநிலங்களில் செயல்படுத்துவதை விட உலக நாடுகள் அறிந்து அந்தந்த நாடுகளில் செயல்படுத்தக்கூடிய அளவிற்கு முன்னோடி திட்டங்களான முதலமைச்சர் இல்லம் தேடி கல்வித் திட்டம். எண்ணும் எழுத்தும் திட்டம். நான் முதல்வன் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம். போன்ற சிறப்பு வாய்ந்த திட்டங்கள் பள்ளி கல்வித் துறையில் செயல்படுத்தப் படுகிறது.

நம்முடைய மாவட்டத்திற்கு ஒரு அரசு வேளாண்மை கல்லூரி மற்றும் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடத்தை கொடுத்து அந்த கட்டிடத்தையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

கரூர் மாவட்டத்தில் 67 அரசு ஆரம்ப நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 113 வகுப்பறை கட்டிடங்கள், ரூ.23 கோடி மதிப்பீட்டிலும், 74 பள்ளிகளுக்கு ரூ 2.5 கோடி மதிப்பீட்டில் கழிப்பறை கட்டிடங்கள், 14 பள்ளிகளுக்கு 86 சமையலறை கட்டிடங்கள், 12 பள்ளிகளுக்கு ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர்கள் 69 பள்ளிகளில் பயிலும் 22.831 மாணவ மாணவிகளுக்கு ரூ 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிதிவண்டிகள் வழங்கப் பட்டிருக்கின்றன. 493 ஸ்மார்ட் வகுப்புகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

இப்படி தொடர்ச்சியாக கரூர் மாவட்டத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த 4 ஆண்டுகளில் பல்வேறு சிறப்புகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தான் சமச்சீர் கல்வி கொண்டுவரப்பட்டன. அதேபோல பள்ளியில் காலை உணவோடு சேர்த்து முட்டைகளை தந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். காமராஜர் பிறந்த நாளை கல்வி மேம்பாட்டு நாளாக அறிவித்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் சரி, நானும் சரி, மாணாக்கர்களுக்கு உதவ தயாராக இருக்கின்றோம்.

அதேபோல பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவச் செல்வங்களுக்கு தேவையான வினா விடை வங்கி புத்தகங்களை தயார் செய்து வழங்கி, உயர்கல்விக்கு செல்லக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளோம். அதோடு மட்டுமில்லாமல், டி.என்.பி.எஸ்.சி போன்ற அரசு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வருவோருக்கு எந்த வித கட்டணமும் இல்லாமல் பயிற்சிகளை வழங்கி அடுத்த நிலைக்கு அழைத்துச் செல்வது என உங்களோடு இணைந்து சிறப்பான பணிகளை முன்னெடுத்து இருக்கின்றோம்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு துறையை இந்தியாவில் தமிழ்நாட்டை தலைநகராக உயர்த்தியிருக்கக்கூடிய வழிகாட்டுதலோடும் சிறப்பு மிக்க மாவட்டமாக நாம் உருவாக்கிடுவோம். தொடர்ந்து விளையாட்டு போட்டிகளை நடத்தி ஆண்டுதோறும் பரிசுகளை வழங்கி வருகிறோம். சிலர் ஆசிரியருக்கு ஐம்பதாயிரம் சம்பளமா என்றெல்லாம் பேசிவிட்டு ஆசிரியர் தினம் வந்தவுடன் அவரது காலில் போய் விழுந்து வணங்குகின்றனர். அவர்களைப் போல அல்ல நாம். இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

தொடர்ந்து, ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு 7 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது, 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் 100 சதவீத தேர்ச்சி வழங்கிய 1185 ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் ஸ்மார்ட் வாட்ச்கள், 129 தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் மாணாக்கர்களை பங்கேற்க செய்த உடற்கல்வி ஆசியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள். கேடயங்கள் மற்றும் ஸ்மார்ட் வாட்ச்கள். மாவட்ட மாநில அளவில் சிறப்பு நிலை தகுதி பெற்ற 619 மாணாக்கர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் தலா ரூ.5,000 ரொக்கம் மற்றும் ஸ்மார்ட் வாட்ச்கள் என மொத்தம் 2046 ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கு ரூ.30.95 லட்சம் மதிப்பீட்டில் பரிசுகளை தனித்தனியாக அனைவருக்கும் வழங்கினார்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், (குளித்தலை), ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்).கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ)செல்வமணி. மண்டலக் குழுத் தலைவர்கள் ஆர்எஸ்.ராஜா, சக்திவேல், ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் வேலுச்சாமி, முத்துக்குமாரசாமி, பள்ளி ஆசிரியர்கள். மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றியம் மேல்முதலமேடு ஊராட்சியில் உள்ள தவெக கட்சியை சார்ந்த 20க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அக்கட்சியில் இருந்து விலகி கழகத் துணைப் பொதுச் செயலாளர் மண்டல பொறுப்பாளருமான ஆ.இராசா எம்.பி. அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் அறிவுறுத்தலன்படி மாவட்ட கழகச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆலோசனைப்படி கும்மிடிப்பூண்டி தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் கும்மிடிப்பூண்டி கி.வே.ஆனந்த் குமார் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார்கள். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை - 2025

# சென்னை மண்டலத்திற்கான சாலை மிதிவண்டிப் போட்டி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு கொடி அசைத்து துவக்கி வைத்தார்!






*சென்னை, செப்.8*

சென்னை சுவாமி சிவானந்தா சாலையில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை-2025 சென்னை மண்டலத்திற்கான சாலை மிதிவண்டி போட்டியை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

சுவாமி சிவானந்தா சாலையில் உள்ள தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையம் அருகில் துவங்கி நேப்பியர் பாலம், தீவுத்திடல், காயிதே இ மில்லத் பாலம் இடதுபுறம் திரும்பி அண்ணா சாலை வழியாக சென்று மீண்டும் சுவாமி சிவானந்தா சாலை தூர்தர்ஷன் தொலைக்காட்சி நிலையம் வரை பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 10 கிலோ மீட்டருக்கும், கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு 20 கிலோ மீட்டர் தூரத்துக்கும் போட்டி நடைபெற்றது.

இதில் சென்னை மண்டலத்தில் உள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட 4 மாவட்டங்களை சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் வெற்றி பெற்ற போட்டியாளர்கள் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கு தேர்வு பெறுவார்கள்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமைச்சர் பி.கே. சேகர்பாபு பள்ளி மாணவர்களுக்காக நடைபெற்ற 10 கிலோ மீட்டர் மிதிவண்டி போட்டியை தொடங்கி வைத்து அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

தொடர்ந்து பள்ளி மாணவிகளுக்கான 10 கிலோமீட்டர் சாலை மிதிவண்டி போட்டியை கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தியின் பொது மேலாளர் சுஜாதா, மண்டல முதல் நிலை மேலாளர் ராஜா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

### நாடு முழுவதும் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம்;

# செப்.10ல் தேர்தல் ஆணையம் ஆலோசனை!

## மாநில தேர்தல் அதிகாரிகள் பங்கேற்கிறார்கள்!

*புதுடெல்லி,செப்.8-*

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை நாடு தழுவிய அளவில் செயல்படுத்துவதற்கான தயார்நிலை குறித்து தேர்தல் ஆணையத்தின் உயர் அதிகாரிகள் செப்.10ஆம் தேதி ஆலோசனை நடத்த உள்ளனர். பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் அங்கு வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு சுமார் 65 லட்சம் வாக்காளர்களை நீக்கியது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் இந்த பிரச்னை தொடர்பான வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் பீகார் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் உள்ள வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதற்காக வரும் புதன்கிழமை(செப்.10) தேர்தல் ஆணையம், மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளின் கூட்டத்தைக் கூட்டியுள்ளது. 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் தமிழ்நாடு, அசாம், கேரளா, புதுச்சேரி, மேற்கு வங்க மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல்கள் நடைபெற உள்ள நிலையில் அதற்கு முன்னதாக இந்த ஆண்டு இறுதியில் நாடு முழுவதும் உள்ள வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடங்குவதற்கு தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. அதற்கு வசதியாகத்தான் அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகளின் கூட்டம் செப்.10 அன்று நடைபெற உள்ளதாக தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்தன.

பிப்ரவரியில் ஞானேஷ் குமார் தலைமைத் தேர்தல் ஆணையராகப் பொறுப்பேற்ற பிறகு அவரது தலைமையில் நடக்கும் மூன்றாவது மாநில தேர்தல் அதிகாரிகளின் கூட்டம் இது ஆகும். இந்த கூட்டத்தில் நாடு முழுவதும் உள்ள வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான தயார் நிலை குறித்து விவாதிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மாதவரம் 16வது வட்டம் மணலி புதுநகர் பகுதி 2-ல்

# குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்கள் சீரமைப்பு!

## புழல் எம். நாராயணன் பணிகளை துரிதப்படுத்தினார்!

*மாதவரம்,செப்.8-*

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் மணலி புதுநகர் பகுதி இரண்டு பிளாக் 5 குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்கள் சீரமைக்கும் பணி நடைபெற்று முடிந்தது.

மாதவரம் வடக்கு பகுதி மணலி புதுநகர் பகுதி இரண்டுக்குட்பட்ட பிளாக் ஐந்தில் உள்ள சாலையில் கழிவுநீர் மற்றும் குடிநீர் குழாய்கள் சேருகின்ற இடத்தில் உடைப்பு ஏற்பட்டு சாலையில் நீர் தேங்கியுள்ளதாக பொதுமக்கள் வைக்க வேண்டுகோளின் படி, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் சென்னை குடிநீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய மணலி மண்டல செயற்பொறியாளர் பிரதிபாதேவி அவர்களுக்கு மேற்படி குழாய்உடைப்பை சீரமைத்து தர வேண்டுகோள் வைத்தார்.

அதன்படி மண்டல செயற்பொறியாளர் உத்தரவின் பேரில், சென்னை குடிநீர் வடிகால் வாரிய உதவி பொறியாளர் மற்றும் ஊழியர்கள் உடைப்பு ஏற்பட்டுள்ள இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டு உடனடியாக மேற்படி உடைப்பை சரி செய்து கொடுத்தனர்.

ஐந்தாவது பிளாக்கில் உள்ள சாலையில் தேங்கி இருந்த நீர் முழுவதுமாக வெளியேற்றப்பட்டது. தகவல் தெரிவித்தவுடன் நடவடிக்கை மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு பகுதி மக்கள் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று குழாய் உடைந்த இடத்தை பார்வையிட்டு சீரமைக்கும் பணிகளை துரிதப்படுத்தினார். 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், மணலி புதுநகர் சி. எம். ராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம், மணலி புதுநகர் பகுதி 2, பிளாக் ஐந்தில் உள்ள சாலையில் ஏற்பட்ட குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் உடைப்பு குறித்து தகவல் அறிந்த மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று இடத்தை பார்வையிட்டு, சென்னை குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் உதவியுடன் குழாய்களை சீரமைக்கும் பணியை துரிதப்படுத்தினார். மணலி மண்டல செயற்பொறியாளர் பிரதீபா தேவி உத்தரவின் பேரில் சென்னை குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பணியை செய்து முடித்தனர்.பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், மணலி புதுநகர் சி. எம். ராஜா நிர்வாகிகள் உடன் உள்ளனர்.